**NAMMA VEEDU**
Montessori House of Children
(PRE-PRIMARY PLAY SCHOOL)
Office : 564, High School Road, Sendurai Post, Natham Taluk,
Dindigul Dt. - 624403. Ph. No. 04544 - 266696.

# நம்ம வீடு பள்ளி விதிமுறைகள்

அ. நம்ம வீடு பள்ளி ஒரு மழலையர் பள்ளி . மூன்று முதல் ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இதில் பயில்கிறார்கள். எனவே அவர்களிடம் உண்மையான அன்பும் அரவணைப்பும் காட்ட வேண்டும்.

ஆ. எக்காரணத்தை முன்னிட்டும் குழந்தைகளின், சக ஊழியர்களின், பெற்றோர்களின் உடலும் மனமும் புண்படும் படி கடுமையாக நாம் நடந்து கொள்ளக் கூடாது.

இ. குழந்தைகளின் உடலமைப்பு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை வைத்து அவர்களை கேலி செய்ய வேண்டாம். தேவையில்லாமல் அவர்களைத் தொடவும் தேவையில்லை.

ஈ. பள்ளிக் கட்டிடம், அதில் உள்ள மாண்டிசொரிக் கல்விச் சாதனங்கள் மற்றும் எந்த ஒரு உடைமையையும் பத்திரமாக வைத்துக் கொள்ளவும். அவை பழுதுபடின், உடனடியாக பள்ளியிடம் தெரியப்படுத்தவும்.

உ. காலை எட்டரை மணிக்குப் பள்ளியில் உங்கள் பணி ஆரம்பம் ஆகின்றது. ஒன்பது மணி முதல் மதியம் பன்னிரண்டரை மணி வரை குழந்தைகள் தாங்களின் முழு பொறுப்பில் இருப்பார்கள்.

ஊ. மதியம் பன்னிரண்டரை மணிக்குக் குழந்தைகளைப் பெற்றோரிடமோ, அவர்களின் நம்பிக்கைக்கு உரியவர்களிடமோ வீட்டுக்கு அனுப்பி விடவும். வேற்று மனிதர்கள் குழந்தைகளைக் கூட்டிச் செல்ல வரும் போது உரிய கடிதம் இன்றி அனுப்ப வேண்டாம்.

எ. சில சமயங்களில் பெற்றோர்கள் வரத் தாமதம் ஆனால் குழந்தையை உங்கள் பொறுப்பிலேயே வைத்து இருத்தல் நலம். குழந்தைகள் சென்ற பின் தாங்கள் பள்ளியினை ஒழுங்கு செய்தபின்னர் வீட்டுக்குச் செல்லலாம்.

ஏ. குழந்தைகளுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டால் உடனடியாக பள்ளியில் உள்ள அவசர முதலுதவி மருந்துகளைத் தரலாம். உடனடியாக அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

ஐ. பெற்றோர்கள் நம்மை அவமரியாதை செய்யும் தருணத்தில் உணர்ச்சி வசப் பட வேண்டாம். எந்த ஒரு ப்ரச்சனையையும் சக ஆசிரியரின் முன்னிலையில் அவரது உதவியுடன் அமைதியாகக் கையாளவும்.

ஒ. தாங்களின் எவ்விதப் ப்ரச்சனையும் எங்களிடம் பகிர்ந்து கொள்ளவும். பெற்றோர்களிடம் எவ்விதக் கருத்து வேறுபாடு உண்டாயின் பள்ளி நிர்வாகத்தின் உதவியை நாடவும்.

ஓ. ஒரு கல்வியாண்டில் பன்னிரண்டு நாட்கள் விடுப்பு எடுக்கலாம். அச்சமயத்தில் ஒரு வேலை நாளின் முன்னதாகவே பள்ளியிடம் விடுமுறை பற்றி அறிவிப்பு தருதல் அவசியம்.

ஔ. சனி, ஞாயிறு, பண்டிகைகள் மற்றும் அரசு விடுமுறைகள் அன்று பள்ளிக்கு விடுமுறை ஆகும். ஆனால் அவை உரிய காலத்தில் பெற்றோகளுக்கு அறிவிக்கப் பட

வேண்டும்.

ஃ. இயற்கைச் சீற்றங்கள், சில எதிர்பாராத நிகழ்வுகளால் பள்ளிக்கு விடுமுறையினை ஆசிரியர்களே அறிவிக்கலாம்.

க. பள்ளியின் அன்றாட , மாதாந்திர வரவு - செலவுகளை முறைப்படி பதிவு செய்தல் அவசியம். ஒவ்வொரு மாத இறுதியிலும் அவை நிர்வாகத்திடம் காட்டப் பட வேண்டும்.

கா. பள்ளியின் சாவிகள் தாங்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கும். அவை உங்களுடைய முழு பொறுப்பில் இருக்கும், ஆனால் அவசரத் தேவைக்கு மட்டுமே அவற்றைப் பயன் படுத்தவும். பள்ளியின் ப்ரதான சாவியையே பயன் படுத்தவும். ப்ரதான சாவியை தினமும் திரு\ திருமதி. அய்யண்ணன் அவர்களிடம் ஒப்படைத்தல் அவசியம். எவ்வித உதவியும் அவர்களிடம் நாடப்படலாம்.

கி. ஒவ்வொரு நாள் மாலையும் பள்ளியின் நிகழ்வு குறித்து சுருக்கமாக சென்னையில் உள்ள பள்ளி இயக்குநரிடம் தொலைப்பேசி மூலம் தெரிக்க வேண்டும்.

கீ. மாண்டிசொரி கல்வியைப் பற்றிய பயிற்சி வகுப்புகள் சில சமயம் சனி - ஞாயிறுகளில் நடைபெறும் போது அவற்றில் அவசியம் கலந்து கொள்ள வேண்டும். சில சமயங்களில் சென்னையில் உள்ள மாண்டிசொரி பள்ளிகளில் பயிற்சிக்காக வர நேரிடக் கூடும்.

கு. நம்ம வீடு பள்ளியில் தமிழ் - ஆங்கில மொழி இரண்டும் கலந்து குழந்தைகளுக்கு வழங்கப் படுகிறது. எனவே இரு மொழி அறிவினையும் அவசியம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கூ. நம்ம வீடு பள்ளி அனைத்து நல்ல கருத்துகளையும், பண்பாடுகளையும் குழந்தைகளுக்குக் கற்றுத் தர வேண்டும். எனவே நல்ல கருத்துகள், கலைகள், பண்பாடுகள் எவ்வித வேறுபாடு இன்றியும் குழந்தைகளுக்குக் கற்றுத் தரப்பட வேண்டும்.

கெ. நம்ம வீடு பள்ளி அனைத்து மதங்களையும் ஏற்கின்றது. எனவே அனைத்து பண்டிகைகளும் எவ்வித மத வேறுபாடும் இன்றி கொண்டாடப் படும்.

கே. அன்றாட வழிபாட்டில் சம்ஸ்க்ருத -- தமிழ் ஸ்துதிகள் கற்றுத் தரப்பட வேண்டும்.

கை. ஒவ்வொரு நாளின் இறுதியிலும் குழந்தைகளின் செயல் பாடுகளை முறையாக எழுதிட வேண்டும்.

கொ. வேலை, செயல் திறன், அறிவு வளர்ச்சி, சாதி, மதம், உடல் ஊனம் , குடும்பச் சூழல் முதலியவற்றினைக் கொண்டு குழந்தைகளைப் பாகுபாடு செய்யக் கூடாது.

கோ. குழந்தைகளும் மக்களும் மரியாதை தரும் படி நமது உடை, நகைகள் , பேச்சு இருத்தல் நலம்.

கௌ. பள்ளியின் விதிமுறைகள் மாறுதலுக்கு உரியது.

மேற்கண்ட விதிமுறைகளில் ஐயம் இருப்பின் பள்ளியினை அனுகவும்.

*`` பள்ளியின் விதிமுறைகளை நான் புரிந்து கொண்டேன். அவை எனக்கு ஏற்புடையதாக உள்ளன. எனவே நான் பள்ளியில் ஆசிரியப் பணியில் சேர்ந்து கல்விப் பணி செய்ய ஒப்புதல் அளிக்கிறேன்.''*